# திருவருகைக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

பிரியமானவர்களே! திருவருகைக்கால நான்காம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டினை சிறப்பிக்க வந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான வணக்கங்களும், வாழ்த்துக்களும்.

இன்றைய நற்செய்தி நமக்குத் தரும் சிந்தனை, நாம், பிறரின் மனநிலையை உணர்ந்தவர்களாக, பிறரின் உணர்வுகளை புரிந்து கொண்டவர்களாக, பிறரின் தனிப்பட்ட மாண்பை மதிப்பவர்களாக வாழ்ந்திட வேண்டுமென்பதே. ஆம். இன்றைய நற்செய்தி அதை நமக்கு அழகாக, ஆழமாக, தெளிவாக உணர்த்துகின்றது. நற்செய்தியில், யோசேப்பு மரியாவை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாமல், மறைவாக விலக்கி விடத் திட்டமிட்டார் என்ற இறைவார்த்தையை வாசிக்கக் கேட்டோம். ஆம். திருமணமாகாமல் கருவுற்றிருக்கும் பெண்ணை அன்றைய யூத சமூகம் எப்படிப் பார்க்கும், அதனால் அப்பெண்ணின் வாழ்க்கைநிலை எத்தகைய இழிநிலைக்கு ஆளாகும், அவளின் எதிர்கால வாழ்வு எப்படி அமையும் என்பதையெல்லாம் உணர்ந்தவராக, மரியாவுக்கும் அத்தகைய அவலநிலை வர விரும்பாதவராக, மனித மாண்புக்கு மதிப்பளிப்பவராக மரியாவை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கி விடத் திட்டமிட்டார்.

மரியாவும் அவர் பங்கை தன் வாழ்வில் சிறப்பாகவே செய்கிறார். வயதான நிலையில் கருவுற்றிருக்கும் எலிசபெத்துக்கு அவரின் உடல்நிலையை உணர்ந்தவராக, மரியா உதவிட ஓடோடிச் செல்கின்றாள். கானாவூர் திருமணத்திலும் இரசம் காலியானதால் அத்திருமண வீட்டார் மனநிலை எப்படி பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை உளமார உணர்ந்தவராக, தன் மகனிடம் அப்பிரச்சனைக்கு தீர்வை அளித்திடும் பொறுப்பை ஒப்படைக்கின்றார்.

அன்னைக்கும், தந்தைக்கும் தாம் சற்றும் சளைத்தவரல்ல என்பதை அவர்கள் தவப்புதல்வன் இயேசுவும் உணர்த்துகின்றார். நயீன் ஊர் கைம்பெண்ணின் இறந்த மகனை, அந்தத் தாயின் உணர்வை புரிந்தவராக, அவரின் வாழ்வு என்னவாகும் என்பதை உணர்ந்தவராக தாமாக முன்வந்து, அவரின் மகனை உயிர்ப்பித்துக் கொடுக்கின்றார். தன்னைக் காண மரத்தில் ஏறி அமர்ந்த சக்கேயுவின் மனநிலையை, அவரின் விருப்பத்தை உணர்ந்தவராக, அவரை தானே அழைத்து, அவரின் வீட்டில் விருந்துண்டு, அவருக்கு மீட்பினைத் தருகின்றார்.

ஆம், இம்மானுவேலாகிய இறைவன் நம்மோடு இருக்கின்றார். நம் குறைகளை, பாவங்களை உணர்ந்தவராக, வலுவின்மையை புரிந்தவராக, நம்மை தம் பேரிரக்கத்தால் எந்நாளும் காத்து, பராமரித்து, வழிநடத்துகின்றார். நாமும், பிறரின் மனநிலையை உணர்ந்து, அவர்களின் தேவைகளை உணர்ந்து, அவர்களின்

உணர்வுகளுக்கு மதிப்பளித்து, உதவிக்கரம் நீட்டிடும் நல்மனதைப் பெற்றிட, அருள்வேண்டி, இத்தெய்வீகத் திருப்பலியில் நம்மை அர்ப்பணிப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அருளும், இரக்கமும் நிறைந்த இறைவா,

எம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், துறவற சபையினர் அனைவரும் அன்னை மரியாளைப் போன்று உமது திருவுளத்தை நிறைவேற்றுவதில் ஆர்வம் உடையோராய் இருக்கவும். சவால்கள் நிறைந்த இக்காலத்தில் மனவுறுதியுடனும். ஆர்வத்துடனும் பணியாற்றிட தூய ஆவியின் அருளையும், வல்லமையையும், நல்ல உடல்நலனையும் அளித்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. பொறுமையும். தயாளமும் நிறைந்த இறைவா,

உமது தூய இதயத்திற்கு எதிராக நாங்கள் செய்யும் அனைத்துப் பாவங்களுக்காகவும் மனம் வருந்தி மன்னிப்பு கேட்கின்றோம். எமது பாவ வாழ்வினால் சோர்வடைந்து போகும் எங்கள் ஆன்மாவிற்கு புத்துயிர் அளித்து, உமது பொறுமையையும், இரக்கத்தையும் உணர்ந்தவர்களாக, நல்ல மனமாற்றத்தைப் பெற்று, புதுப்படைப்பாக மாறிட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. மாட்சியும் மகத்துவமும் நிறைந்த இறைவா,

எம் நாட்டு அரசியல் தலைவர்கள் மற்றும் சமூகத் தலைவர்கள் மக்களை நேரிய வழியில் நடத்தவும், மக்களிடையே சாதி, மத, இனவெறியைத் தூண்டி, பிரிவினைகளை உருவாக்கிடாமல், மக்களை ஒற்றுமையுடன் வழியில் நடத்திடவும், மக்களின் வாழ்வு நல்ல ஒரு பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டிட, பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி, அவர்களின் வாழ்வு ஒளிமயமாக்கிடக் கூடிய ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. கனிவும், பணிவும் நிறைந்த இறைவா,

நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள மக்கட்செல்வங்களுக்காக நன்றி கூறுகின்றோம். இவர்கள் உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழ்வதில் தங்கள் கவனத்தைச் செலுத்தவும், எமது பிள்ளைகள் இறையுறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும் சிறந்து விளங்கி

உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தியருள வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நீதியும், நேர்மையும் நிறைந்த இறைவா,

இன்று உலகநாடுகள் முழுமையும் அகதிகளாகி இடம் பெயர்ந்து அல்லலுறும் அனைத்து மக்கள்மீதும் மனமிரங்கி அவர்களின் கண்ணீரைத் துடைத்தருளும். அவர்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களிலே நிம்மதியாக வாழவும், உலகிலே அடக்குமுறைகள், வன்முறைகள், தீவிரவாதம் ஒழிந்து, அன்பும், மனிதநேயமும், நீதியும், அமைதியும் நிலைபெறச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com